சுருக்கம்

சிறுபான்மையினர் நலன் – மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 2022–2023 – கிராமப்புறங்களில் பயிலும் சிறுபான்மையின மாணவியர் இடைநிற்றல் இன்றி, தொடர்ந்து கல்வி பயில 3–ஆம் வகுப்பு முதல் 6–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் – செயற்படுத்துதல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி1) துறை

அரசாணை (நிலை) எண்.57 நாள் 20.07.2022

திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, ஆடி 4

படிக்கப்பட்டது:–

சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண்.அ4/537/2020, நாள் 05.05.2022 மற்றும் 16.05.2022.

*****

ஆணை:–

2022–2023–ஆம் ஆண்டுக்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:

*"கிராமப்புறங்களில் பயிலும் சிறுபான்மையின மாணவியர் இடைநிற்றல் இன்றி, தொடர்ந்து கல்வி பயில ஊக்கத்தொகையாக 3–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ரூ.500–ம் மற்றும் 6–ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ரூ.1,000–மும் 2 கோடியே 75 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்."*

2. மேற்படி மானியக் கோரிக்கை அறிவிப்பைச் செயற்படுத்தும் விதமாக, சிறுபான்மையின பெண் குழந்தைகளின் பள்ளிப்படிப்பானது எந்தவொரு காரணங்களுக்காகவும், அப்பெண் குழந்தைகளின் ஏழை பெற்றோர்களின் பொருளாதார நிலை காரணமாகவும், தடை ஏற்படாமல் இடையூறின்றி தொடர்ந்து கல்வி பயிலும் வகையில் கிராமப்புறங்களிலுள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு உதவி பெறும் பள்ளிகளில் 3 முதல் 6–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியரின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்குள் உள்ள சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த பெண் குழந்தைகளுக்கு "கிராமப்புற பள்ளிகளில் சிறுபான்மையின சமுதாய பெண் குழந்தைகள் கல்வி பயில ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்" எனும் புதிய திட்டத்திதைச் செயற்படுத்த மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் சிறுபான்மையினர் நல இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார். அத்துடன், இத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு முதற்கட்டமாக 2022–2023–ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளில் அறிவிக்கப்பட்ட தொகையான ரூ.2,75,60,000/– (ரூபாய்

இரண்டு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்)–ஐ ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து "கிராமப்புற பள்ளிகளில் சிறுபான்மையின சமுதாய பெண் குழந்தைகள் கல்வி பயில ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்" எனும் புதிய திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் கீழே குறிப்பிடப்பட்ட செயலாக்க வழிமுறைகளைக் கொண்டு செயற்படுத்த அரசு ஆணையிடுகிறது :–

அ) தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கிராமப்புறங்களிலுள்ள பள்ளிகளில் 3–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் 6–ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் பள்ளி செல்வதை இடையில் நிறுத்தாமல் தொடர ஊக்கத் தொகையாக கல்வி ஆண்டில் ஆண்டொன்றுக்கு முறையே ரூ.500/–ம் மற்றும் ரூ.1000/–ம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மூலமாக வழங்கப்படும்.

ஆ) அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு உதவி பெறும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் இத்திட்டத்தில் சேரும்.

இ) பயனாளிகள் தேர்வு செய்ய தேவையான தகுதிகள் :

i சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

ii விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களின் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

ஈ) மாணவியரின் பெற்றோர் / பாதுகாவலரின் வருமான வரம்பு ஆண்டிற்கு ரூ.1,00,000/– என நிர்ணயிக்கப்படுகிறது.

உ) ஆதிதிராவிடர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த அனைத்து பெண் குழந்தைகளுக்கும் ஊக்க உதவி தொகை வழங்குவது போல அனைத்து சிறுபான்மையினர் பெண் குழந்தைகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

ஊ) பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் முறை: மாணவிகளை தேர்வு செய்ய சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர் மூலம் வரிசை எண் (இ) இல் (i) & (ii) இனங்களை கருத்திற் கொண்டு தேர்வு செய்து உதவி தொடக்க கல்வி அலுவலருக்கு பரிந்துரைத்தல் வேண்டும்.

எ) ஊக்கத்தொகை வழங்கும் விதம்:

i. சம்பந்தப்பட்ட உதவி தொடக்க கல்வி அலுவலரால் பரிந்துரைக்கப்படும் பள்ளிவாரியான ஒருங்கிணைந்த பட்டியலை சம்பந்தப்பட்ட மாவட்ட வட்டார தொடக்கக் கல்வி அலுவலர் / மாவட்ட கல்வி அலுவலர் தங்கள் எல்லைக்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் கேட்புப்பட்டியலை ஒருங்கிணைத்து சான்றொப்பத்துடன் மாவட்ட

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு மூன்று நகல்களை ஒப்புதலுக்கு அனுப்ப வேண்டும்.

ii. சம்பந்தப்பட்ட மாவட்ட வட்டார தொடக்கக் கல்வி அலுவலர் / மாவட்ட கல்வி அலுவலரால் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட கேட்புப் பட்டியலை பரிசீலித்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் ஒப்பளிப்பு செய்து ஆணை பிறப்பிக்க வேண்டும்

iii. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செயல்முறை ஆணையினை (2 பிரதிகள்) மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் சம்மந்தப்பட்ட வட்டார தொடக்கக் கல்வி அலுவலருக்கு தக்க மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட வேண்டும்.

iv. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியருக்கு மின்னணு பரிவர்த்தனை (ECS) மூலமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

v. சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியருக்கு மின்னணு பரிவர்த்தனை (ECS) மூலம் அனுப்பப்பட்ட தொகை, பெறப்பட்ட நாளிலிருந்து 15 தினங்களுக்குள் சம்பந்தப்பட்ட, மாணவியர்களின் பெற்றோரின் / தாயாரின் / பாதுகாவலரின் பட்டியலிடப்பட்ட வங்கிகளில் (Scheduled Commercial Banks) சேமிப்பு வங்கி கணக்கிற்கு IFHRMS மூலமாக நேரடியாக மின்னணு பரிவர்த்தனை (ECS) மூலம் செலுத்தி பணபரிவர்த்தனை படிவத்துடன், உரிய சான்றுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் / வட்டார தொடக்க கல்வி அலுவலர் / மாவட்ட தொடக்க கல்வி அலுவலருக்கு தெரிவித்தல் வேண்டும்.

ஏ) கணக்கு பராமரிப்பு : பெண் குழந்தை கல்வி திட்டத்திற்கு வழங்கப்பட்ட ஊக்கத்தொகை விவரம், பள்ளிவாரியாக குழந்தைகளின் பெயர், முகவரி, பயிலும் வகுப்பு, வழங்கப்பட்ட ஊக்கத் தொகை, வங்கி பெயர் மற்றும் வங்கி அலுவலருக்கு வழங்கப்பட்ட நாள் போன்ற விவரங்களை பதிவேட்டில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் பதிவு செய்தல் வேண்டும்.

ஐ) பயனீட்டு சான்றுகள்: சம்பந்தப்பட்ட அனைத்து குழந்தைகளின் பெற்றோர் / தாயார் / பாதுகாவலர் பெயரில் துவக்கப்பட்டுள்ள வங்கி சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டதற்கான ஒப்புதல் சான்றினை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியரிடமிருந்து பெற்று மாவட்ட அலுவலக கோப்பில் சேர்த்து அறிக்கையை சிறுபான்மையினர் நல இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

ஒ) திட்டத்தின் ஆய்வு மற்றும் கண்காணிப்பு: சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் வரையறுக்கப்பட்ட பருவம் தோறும் ஆய்வு செய்து அதன் விவரங்களை சிறுபான்மையினர் நல இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் பயனாளிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கியது போக மீதமுள்ள தொகையை வட்டி உட்பட குறிப்பிட்ட நாள் முடிவடைவதற்குள் அரசு கணக்கில் செலுத்த வேண்டும்.

ஓ) மேலும், இத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு முதற்கட்டமாக ரூ.2,75,60,000/– (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்)–க்கு நிதி ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:–

"2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 04 சிறுபான்மையினர் நலன் – 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AD – 3 – ஆம் வகுப்பு முதல் 6ஆம் வகுப்பு வரை படிக்கும் சிறுபான்மையின ஊரக மாணவிகளுக்கு பரிசுகள், ஊக்கத் திட்டங்கள் – 339 வெகுமதிகள் – 01 வெகுமதிகள்"

(IFHRMS – த.தொ.கு:– 2225–04–001–AD–33901)

5. மேற்காணும் புதிய, கணக்கு தலைப்பிற்கு சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு, பொது–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாக கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள

அட்டவணை "A" யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு – செலவு, பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தினை 2022–2023–ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய கருத்துருவை நிதி (பி, மிபி (ம)சிந / வ.செ.பொது.I) துறைக்கு அனுப்பிவைக்குமாறு இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே பத்தி 3–இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயலாக்க வழிமுறைகளைப் பின்பற்றி சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்குத் தக்க அறிவுரைகளை வழங்கி இத்திட்டத்தினை செயற்படுத்துமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.35312/நிதி (பி,மிபி(ம)சிந)/2022, நாள் 20.07.2022–இல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.0773 (ஏழுநூற்று எழுபத்து மூன்று) (IFHRMS ASL No. 202207 0773).

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை–05.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–08.
நகல் :–
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ்
தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
நிதி (பி,மிபி (ம) சிந / வ.செ.பொ. I / வ.செ.பொ. II / வ.வ. I) துறை,
சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–09.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–09.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/7/22
பிரிவு அலுவலர்